2005 செப்டம்பர் 26]

other I.T. software 10 சதவிகிதம். Business Process Outsourcing; Business Process Outsourcing என்றால், வெளிநாட்டிலே இருக்கின்றவர்கள், அங்கே அவர்களுக்குத் தேவையான வேலையை நம்முடைய நாட்டிலே, இங்கே செய்து, அவர்களுக்கு நம்முடைய Computer, Satellite மூலமாக அனுப்பி வைக்கப்படுவது Business Process Outsourcing. Product Development 3%, others 9%; இது மொத்தத்திலே 10,730 கோடி ரூபாய். Hardware என்று சொன்னால், நாம் வைத்திருக்கின்ற Computer, Laptop, Cell Phone, இவ்வெல்லாம் Hardware என்று சொல்லிக்கொள்கின்றேன்.

முற்பகல் 10–20

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 45, திரு. லா. சந்தானம், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

45—

திருக்கோயில் திருப்பணி

***20934—திரு. லா. சந்தானம்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம், தனுஷ்கோடி செல்லும் வழியிலுள்ள கோதண்டராமசாமி கோயில் கட்டடத்தைச் செப்பனிட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்:

இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம் அருள்மிகு கோதண்டராமசாமி திருக்கோயில் திருப்பணியை சுமார் 9 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் திருக்கோயில் திருப்பணி நிதியிலிருந்து மேற்கொள்ள நிர்வாக மற்றும் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டு, டெண்டர் அங்கீகாரமும் வழங்கப்பட்டு, வேலைகள் நடைபெற்று வருகின்றன. இத்திருக்கோயிலின் பழுதடைந்த R.C.C. பிரகார மண்டபம் முழுவதும் இடித்து அப்புறப்படுத்தப்பட்டு, செங்கல் கட்டுமானப் பணிகள் துவங்கப்பட்டு, 80 சதவீதப் பணிகள் நிறைவுற்றுள்ளன என்பதைத் தங்கள்மூலம் இப்பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2005 செப்டம்பர் 26

திரு. லா. சந்தானம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த வினாவானது நீண்ட நாட்களுக்கு முன்னால் எழுப்பப்பட்டது. இப்போது அமைச்சர் அவர்கள் நல்லதொரு பதிலினைத் தெரிவித்திருக்கிறார்கள். இது மிகப் பழமையான கோயில். பல்வேறு சுற்றுலாப் பயணிகளும் வந்து பார்க்கின்ற அளவில் இருக்கின்ற அந்தத் திருக்கோயில் பழுதடைந்த நிலையில் இருந்த காரணத்தினால், அதற்குத் திருப்பணி செய்ய வேண்டும் என்கின்ற கேள்வியை நான் எழுப்பியிருந்தேன். இப்போது அமைச்சர் அவர்கள் அதற்குண்டான ஆயத்தப் பணிகள் எல்லாம் நடந்து, 80 சதவிகிதம் முடிந்திருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அதை விரைவாக முழுமையாக நிறைவு செய்து, அங்கே வருகின்ற சுற்றுலாப் பயணிகளெல்லாம் கண்டு களிப்புறுகின்ற அளவிற்குச் செய்து தரவேண்டும் என்று தங்கள்மூலமாகக் கேட்டுக்கொண்டு, இதைச் செய்தமைக்கு இந்த அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம், தனுஷ்கோடி செல்லும் வழியில் அமைந்துள்ள அருள்மிகு கோதண்டராமசாமி திருக்கோயில், இராமேஸ்வரம் அருள்மிகு இராமநாத சுவாமி திருக்கோயிலின் உப கோயில்களுள் ஒன்றாகும். இத்திருக்கோயில் உப கோயில் என்பதால், பிரதானத் திருக்கோயிலுடன் சேர்த்து ஒரு கணக்காகப் பேணப்படுகிறது. இத்திருக்கோயில் தனுஷ்கோடி செல்லும் சாலையில் 18 கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது. இத்திருக்கோயில் நான்கு புறமும் கடல் சூழ்ந்துள்ள இடத்தில் அமைந்துள்ளதால், தற்போது குறுக்குச் சாலை அமைக்கப்பட்டுள்ளது. ஸ்ரீராமபிரான் இலங்கையில் இராவணனை வதம் செய்து விட்டுத் திரும்பி வரும் வழியில் மேற்படி கோயிலில் விபீஷணருக்கு ஸ்ரீராமபிரானால் பட்டாபிஷேகம் செய்து வைக்கப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் ஜூன், ஜூலை மாதத்தில் இத்திருக்கோயிலில் விபீஷணர் பட்டாபிஷேகம் நடைபெற்று வருகிறது. அதன்பின், இத்திருக்கோயில் உருவான வரலாற்றை நினைவுகூரும் வகையில் இராமலிங்க பிரதிஷ்டை உற்சவம் நடைபெற்று வருகிறது. இத்திருக்கோயில் திருப்பணிகளுக்காக 9 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, பிரகார மண்டபம், மேல்தளத்தில் தட்டோடு பதித்தல், தடுப்புச் சுவர் கட்டுதல், விபீஷணர் மண்டபம் கட்டும் பணி போன்ற திருப்பணி வேலைகள் துவக்கப்பட்டு, 80 சதவீத வேலைகள் முடிந்துள்ளதாலும், மீதமுள்ள 20 சதவீதப் பணிகளும் மிகக் குறுகிய காலத்தில் முடிக்கப்பட்டு சம்ப்ரோக்ஷணம் மிக விரைவில் நடத்தப்பட

2005 செப்டம்பர் 26]

வேண்டுமென்று' மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டு இருக்கிறார்கள். அந்த அடிப்படையில் உடனடியாக வேலைகளை முடித்து, திருப்பணிகள் நடைபெறும் என்பதைத் தங்கள்மூலம் அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. க. முருகவேல் ராஜன்.

திரு. க. முருகவேல் ராஜன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுரையிலுள்ள அருள்மிகு மீனாட்சியம்மன் கோயில் உலகப் பிரசித்தி பெற்றதாகும். அங்கே ஒவ்வொரு நாளும் தமிழகத்திலிருந்தும், பல்வேறு மாநிலங்களிலிருந்தும், இன்னும் வெளிநாடுகளிலிருந்தும்கூட பயணிகள், பக்தர்கள், ஏராளமாக வந்து செல்கிறார்கள். அந்தக் கோயிலில் இருக்கக்கூடிய பொற்றாமரைக் குளம் மிகவும் புகழ்பெற்ற குளமாகும். அங்கே தேங்கியிருக்கக்கூடிய நீர் இப்போது மிகவும் அசுத்தமடைந்து, துர்நாற்றம் வீசுகிற நிலையில் இருக்கிறது என்று பக்தர்களிடமிருந்து நிறையப் புகார்கள் வருகின்றன. பொற்றாமரைக் குளத்தில் இருக்கின்ற நீர் அசுத்தம் அடைந்திருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா? அதை அப்புறப்படுத்தி, மீண்டும் தூய நீர் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கின்றேன்.

முற்பகல் 10–25

மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட தகவல் எங்களுக்கு எதுவும் வரவில்லை. தனிக் கேள்வி போட்டால், அதற்கான தகுந்த விடையளிக்கப்படும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 46, திரு. ஐ. கணேசன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

46—

கோயில் சிற்பங்கள்

***73161—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

TRUTH ALONE TRIUMPHS